Registered as a News Paper | பக்கங்கள்: 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம்: 02 | திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 27 | (11-01-1992) | சனிக்கிழமை | ஓசை: 327

## பட்டதாரி ஆசிரியர் வயதெல்லை நீடிப்பு

பட்டதாரி ஆசிரியர்களின் வயதெல்லையை நீடித்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. தற்போது பட்டம் பெற்றுள்ள 45 வயது பூர்த்தியானவர்களும், பட்டதாரிபயிலுநர் ஆசிரியர் பதவிக்குவிண்ணப்பிக்கலாம் என்றும், இதற்கான போட்டிப் பரீட்சை ஒன்று விரைவில் நடாத்தப்படும் என்றும், 1991 நவம்பர் 25 ஆம் திகதியன்று 45 வயதிற்கு கூடாதவர்களும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என்றும், இந்த மாதம்20 ஆம்திகதி வரை பரீட்சை ஆணையாளரால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# நள்ளிரவில் புலிகள் துணிகர தாக்குதல்

# காவலரண் அழிப்பு: 10 கடற்படை மடிவு

## பொன்னாலை பாலத்தில் வீர சாதனை

(நமது நிருபர்)

காரைநகர் பொன்னாலைப் பாலத்தில் அமைந்திருந்த சிறிலங்கா கடற்படையின் காவலரண் மீது விடுதலைப்புலிகள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப் பிரிவு மேற்கொண்ட துணிகரம் மிக்க தாக்குதலில் பத்து கடற்படையினர் கொல்லப்பட்டனர். நவீன ஆயுதங்கள் பெருமளவு கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் சேதம் ஏதுமில்லை.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இத்தாக்குதல் நடைபெற்றது. காரைநகரையும், குடாநாட்டையும் இணைக்கும் வீதியில் அமைந்திருந்த காவலரண் மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இவ்வீதியில் அமைந்திருந்த இரண்டு காவலரணில் ஒன்றின் மீதே நன்கு திட்டமிட்டு மிகவும் துணிகரமாக இத்தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இக்காவலரண்கள்கடற்பரப்பினால் சூழப்பட்டிருந்தமையால், மிகவும் பாதுகாப்பு மிக்கவையாகவும் எவரும் அணுக முடியாதவையாகவும், அணுகியவர்கள் திரும்பிவர முடியாத அளவிற்குப் பாதுகாப்புக் கொண்டவையாகவும் இருந்தன.

இவ்வாறான பாதுகாப்புப் பொருந்திய இரண்டு காவலரண்களுக்கு இடையில் கடல்வழி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நவீன ஆயுதங்கள் பெருமளவு மீட்பு

(நமது நிருபர்)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணியின் அதிரடித்தாக்குதலின் போது பொன்னாலைப் பாலத்தடி காவலரண்களிலிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள் வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம். ஜி - 02
- ★ ரி 69 ஆர். பி. ஜி - 01
- ★ ரி.81-1 ரக துப்பாக்கிகள் 03
- ★ ரி.56-2 ரக துப்பாக்கிகள் 02
- ★ ரி.56 பட்மொடல் 02
- ★ 60 எம். எம். பை போட் மோட்டர் 01
- ★ சிக்னல் பிஸ்டல் 01
- ★ பைனாகுலர் 01

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலை நோக்கி எறிகணை வீச்சு

(பொன்னாலை)

பலாலி இராணுவ முகாமில் இருந்து மூளாய், பொன்னாலை ஆகிய பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கிறது.

நேற்று அதிகாலை 4.00 மணியளவில் மேற்படி பகுதிகளை நோக்கித் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதல்களால் இப்பகுதிகளில் இருந்த நெல் வயல்கள் சில எரிந்தன. ஷெல் குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் காணப்படுகிறது. (க)

## குருநகர் மீது ஷெல் வீச்சு; ஒருவர்பலி நால்வர்படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மீது சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார். நான்கு பேர்பலத்த காயமடைந்தனர்.

நேற்றுமாலை 6'30 மணியளவில் மண்டைதீவில் இருந்து நடாத்தப்பட்ட இவ் எறிகணைத் தாக்குதலின் போது பு. ரவிக்குமார் (வயது 8)

(3 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் சிக்கியுள்ள 90வாகனங்களைமீட்டு தருக

### அரச அதிபரிடம் கோரிக்கை

(நமது நிருபர்)

பூநகரிப் பகுதியில் கடந்த மூன்று மாதங்களாகச் சிறிலங்கா இராணுவப் பிடிக்குள் சிக்கியுள்ள தொண்ணூறு வாகனங்களையும் மீட்டுத்தரும்படி வடபிராந்திய பொதிசுமக்கும் வாகனச் சங்கம் யாழ். அரசாங்கஅதிபரைக் கேட்டுள்ளது

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் பூநகரிப் பகுதியைச்சிறிலங்காஇராணுவத்தினர் சுற்றி வளைத்தபோது அதன் பிடிக்குள் யாழ். குடாநாட்டிற்கான உணவுப்பொருள்களை ஏற்றி

(3ஆம் பக்கம் பார்க்க)

## பூசா இளைஞர் விடுதலை; ஆராய மாநாடு

(கொழும்பு)

பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாநாடொன்றுகூடிஆராயவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(3ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் கடத்தலுக்கு காமினியே காரணம்

(கொழும்பு)

பேராசிரியர் புல்ஜன்ஸைக் கடத்த முன்னாள் காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தித் துறை அமைச்சர் காமினி திஸநாயக்காதான் ஒழுங்கு செய்தார் என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

'என்னைக் கடத்தியவர்கள் எனக்கு ஒரு தீங்கும் செய்ய

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்தீர்வுஇறுதியானது; இராணுவ நடவடிக்கை தொடரும்

\- சிறில்ரணதுங்கா

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே இறுதியானது. ஆனால் அந்தப்

# பொன்னாலை பாலத்தில் வீர சாதனை

(நமது நிருபர்)

**காரைநகர் பொன்னாலைப் பாலத்தில் அமைந்திருந்த சிறிலங்கா கடற்படையின் காவலரண் மீது விடுதலைப்புலிகள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படைப் பிரிவு மேற்கொண்ட துணிகரம் மிக்க தாக்குதலில் பத்து கடற்படையினர் கொல்லப்பட்டனர். நவீன ஆயுதங்கள் பெருமளவு கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் சேதம் ஏதுமில்லை.**

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இத்தாக்குதல் நடைபெற்றது. காரைநகரையும், குடாநாட்டையும் இணைக்கும் வீதியில் அமைந்திருந்த காவலரண் மீதே இத்தாக்குதல் நடாத்தப்பட்டது. இவ் வீதியில் அமைந்திருந்த இரண்டு காவலரணில் ஒன்றின் மீதே நன்கு திட்டமிட்டு மிகவும் துணிகரமாக இத்தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இக்காவலரண்கள்கடற்பரப்பினால் சூழப்பட்டிருந்தமையால், மிகவும் பாதுகாப்பு மிக்கவையாகவும் எவரும் அணுக முடியாதவையாகவும், அணுகியவர்கள் திரும்பிவர முடியாத அளவிற்குப் பாதுகாப்புக் கொண்டவையாகவும் இருந்தன.

இவ்வாறான பாதுகாப்புப் பொருந்திய இரண்டு காவலரண்களுக்கு இடையில் கடல்வழி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நவீன ஆயுதங்கள் பெருமளவு மீட்பு

(நமது நிருபர்)

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை அணியின் அதிரடித்தாக்குதலின் போது பொன்னாலைப் பாலத்தடி காவலரண்களிலிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள் வருமாறு:

- ★ ஏ. கே. எல். எம். ஜி - 02
- ★ ரி 69 ஆர். பி. ஜி - 01
- ★ ரி.81-1 ரக துப்பாக்கிகள் 03
- ★ ரி.56-2 ரக துப்பாக்கிகள் 02
- ★ ரி.56 பட்மொடல் 02
- ★ 60 எம். எம். பை போட் மோட்டர் 01
- ★ சிக்னல் பிஸ்டல் 01
- ★ பைனாகுலர் 01

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொன்னாலை நோக்கி எறிகணை வீச்சு

(பொன்னாலை)

பலாலி இராணுவ முகாமில் இருந்து மூளாய், பொன்னாலை ஆகிய பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டிருக்கிறது.

நேற்று அதிகாலை 4.00 மணியளவில் மேற்படி பகுதிகளை நோக்கித் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதல்களால் இப்பகுதிகளில் இருந்த நெல் வயல்கள் சில எரிந்தன. ஷெல் குண்டு ஒன்று வெடிக்காத நிலையில் காணப்படுகிறது. (க)

## குருநகர் மீது ஷெல் வீச்சு; ஒருவர்பலி நால்வர்படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மீது சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார். நான்கு பேர்பலத்த காயமடைந்தனர்.

நேற்றுமாலை 6'30 மணியளவில் மண்டைதீவில் இருந்து நடாத்தப்பட்ட இவ் எறிகணைத் தாக்குதலின் போது பு. ரவிக்குமார் (வயது 8)

(3 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரியில் சிக்கியுள்ள 90வாகனங்களைமீட்டு தருக

### அரச அதிபரிடம் கோரிக்கை

(நமது நிருபர்)

பூநகரிப் பகுதியில் கடந்த மூன்று மாதங்களாகச் சிறிலங்கா இராணுவப் பிடிக்குள் சிக்கியுள்ள தொண்ணூறு வாகனங்களையும் மீட்டுத்தரும்படி வடபிராந்திய பொதிசுமக்கும் வாகனச் சங்கம் யாழ். அரசாங்கஅதிபரைக் கேட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் பூநகரிப் பகுதியைச்சிறிலங்காஇராணுவத்தினர் சுற்றிவளைத்தபோது அதன் பிடிக்குள் யாழ். குடாநாட்டிற்கான உணவுப்பொருள்களை ஏற்றி

(3ஆம் பக்கம் பார்க்க)

## பூசா இளைஞர் விடுதலை; ஆராய மாநாடு

(கொழும்பு)

பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாநாடொன்றுகூடி ஆராயவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(3ஆம் பக்கம் பார்க்க)

## பேராசிரியர் கடத்தலுக்கு காமினியே காரணம்

(கொழும்பு)

பேராசிரியர் புல்ஜன்ஸைக் கடத்த முன்னாள் காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தித் துறை அமைச்சர் காமினி திஸநாயக்காதான் ஒழுங்கு செய்தார் என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

'என்னைக் கடத்தியவர்கள் எனக்கு ஒரு தீங்கும் செய்ய

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல்தீர்வுஇறுதியானது; இராணுவ நடவடிக்கை தொடரும்

### - சிறில்ரணதுங்கா

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே இறுதியானது. ஆனால் அந்தப் பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காக இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை மூலம் தீர்வு:

# இராணுவ செலவில் வெட்டு

### வெளிநாட்டு தூதுவர் அரசுக்கு அழுத்தம்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கள் மூலம் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டும் என்றும் இராணுவச் செலவினங்களை வெகுவாகக் குறைக்க வேண்டும் என்றும் சிறிலங்காவுக்கு உதவிவழங்கும் நாடுகளின் தூதுவர்கள் வற்புறுத்தியுள்ளனர். இத் தூதுவர்களின் மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்றபோது இனப் பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கத்தின் தற்போதைய அணுகுமுறை குறித்து அதிருப்தி தெரிவிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணவும், பாதுகாப்பு செலவினங்களை வெட்டவும் அரசாங்கம் மேற்கொள்ளும் உருப்படியான நடவடிக்கைகளின் அடிப்படையிலேயே எதிர்கால உதவித் தொகை தீர்மானிக்கப்படுமெனவும் வெளிநாட்டு தூதுவர்கள் அரசுக்கு அழுத்தம் போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இராஜ தந்திரிகள் தரப்பில் பல கேள்விகள் எழுப்பப்பட்டன. அரசாங்க ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் கடந்த காலத்தில் வெகுதாமதமாக இருந்ததாகவும் இராஜதந்திரிகள் முறையிட்டுள்ளனர்.

மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் முறைப்பாடுகள் குறித்த விசாரணைகளை பல நிர்வாகக் குழு மேற்கொண்டு வருகின்றன என்றும் அரசாங்க தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

(3ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டாவின் திட்டத்திற்கு சுவீடிஷ் தூதர் பாராட்டு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்விற்கு இ.தொ.கா.தலைவர் அமைச்சர் தொண்டமான் முன்வைத்துள்ள யோசனைகளைச் சுவீடிஷ் தூதுவர் வெகுவாகப் பாராட்டியுள்ளதாக அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இராஜதந்திரிகளுடனான சந்திப்பின்போது இலங்கை தரப்பில் பேசியவர்களிடம் சுவீடிஷ் தூதுவர் இது குறித்துப் பாராட்டு தெரிவித்ததாகவும் அந்த அதிகாரிதெரிவித்தார்.

ஆனால் அமைச்சர் தொண்டமான் முன் வைத்திருக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## துரோகிகளுக்கு உடந்தை; மூவர் புலிகளால் கைது

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை ஆரம்பகாலத்தில் காட்டிக்கொடுத்த தேசத் துரோகிகளுக்கு உடந்தையாக இருந்த மூவர் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். இவ்வாறு நேற்று நடைபெற்றபத்திரிகையாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பாவரசன் தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### வேலன்

மன்னார் மாவட்டத்தில் கடந்த 8 ஆம் திகதி காலை 11 மணியளவில் கல்லாற்றிற்

(3ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன் துறைமுகம் இருவாரங்களில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறைமுகம் இன்னும் இரண்டு வாரங்களில் திறக்கப்படும். காங்கேசன் துறைமுகம் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் யாழ். குடாநாட்டிற்கு விநியோகிக்கப்படும். இதற்கான நடவடிக்கைகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மேற்கொண்டு வருகிறது

தற்சமயம் காங்கேசன்துறைமுக களஞ்சியங்களில் 12,000 மெட்ரிக் தொன் உணவுப் பொருள்கள் சேமிக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் ஒரு வாரத்தில் மேலும் 800 மெட்ரிக் தொண் உணவுப் பொருள்கள் இறக்கப்படவிருப்பதாகவும் செஞ்சிலுவைச் சங்க அதி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ காவல் துறை
## வெற்றிடங்கள்

**01. சாரதி** (வாகனம் செலுத்துபவர்)/**மெக்கானிக்**
இலேசான, பாரமான வாகனங்கள்
கல்வித் தகைமை: 8ஆம் வகுப்பு
வயது: 18-40 வரை

அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும் வாகனம் செலுத்தும் அத்தாட்சிப் பத்திரங்களுடனும் 13-01-92 திங்கள் காலை 9-00 மணிக்கு தமிழீழ காவல் துறையின் நாவலர் வீதியில் உள்ள தலைமைச் செயலகத்திற்கு நேரில்வரவும்.

**02. காவலர்** (பொலிஸ்)/ **சிறைக் காவலர்**
கல்வி 8ஆம் வகுப்பு சித்தி
வயது: 18-30 வரை
உயரம்: 5 அடி 6அங்

சான்றிதழ்களுடன் 13-01-92 திங்கள் காலை 9.00 மணிக்கு தமிழீழ காவல் துறையின் நாவலர் வீதியில் உள்ள தலைமைச் செயலகத்திற்கு நேரில் வரவும் ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

(சி3762)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

கடந்த 04-01-92 சனிக்கிழமை பி.ப. 4.30 மணியளவில் திருநெல்வேலிசந்தியிலிருந்து கல்வியங்காடு செல்லும் ஆடியபாதம் வீதியில் புகைப்படங்கள் அடங்கிய ''சிறிய அல்பம்'' ஒன்று தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அதை ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2091)

### வாங்கப்படும்

இலுப்பை அரைப்பும், இலுப்பம் விதையும் வாங்கப்படும். மில்க்வைற், யாழ்ப்பாணம் (சி/3765)

### பொதுக் கூட்டம்

யாழ்.மாவட்ட கூட்டுறவு சபையின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 18-1-92 சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் தலைவர் திரு. சி. குமாரவேல் அவர்களின் தலைமையில் நடை பெறும்.

## சுகாதாரக் கொள்கை திருத்தியமைக்க ஏற்பாடு

(கொழும்பு)
அரசாங்கத்தின் சுகாதார கொள்கைகளை திருத்தி அமைக்க சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான சட்ட மூலம் ஒன்றை இந்தஆண்டின் முற் பகுதியில் வரையவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உருவப்படத் திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் அக்கல்லூரியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக விஞ்ஞான ஆசிரியராகவும் பின் அதிபராகவும் கடமையாற்றி அமரத்துவம் அடைந்த அமரர் திரு. சி. நவரத்தினம் அவர்களின் உருவப்படம் திரை நீக்கம் செய்து வைக்க உள்ளனர்.

மேற்படி வைபவம் இன்று சனிக்கிழமை (11.1.92) பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ். பத்மநாதன் அறிவித்துள்ளார்.

## பங்கீட்டுக்கு அரிசி

(ஈச்சமோட்டை)
தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு யாழ். பல நோ. கூ. சங்கம் தமது எல்லைக்கு உட்பட்ட மக்களுக்கு தீட்டல் பச்சை அரிசியை பங்கீட்டு அடிப்படையில்வழங்கவுள்ளது

## யாழ். ஊனமுற்றோர் சங்கம்
## செயல்திட்ட இணைப்பாளர்/ நிர்வாக ஊழியர் தேவை

மேற்படி சங்கத்தின் செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், நிர்வகிக்கவும் ஊனமுறோர் மத்தியில் செயலாற்ற, அனுபவமுள்ள, தகுதி வாய்ந்த, சேவை மனப்பான்மை உடைய ஒருவர் உடனே தேவை. உங்கள் விண்ணப்பங்களை 18-01-1992க்கு முன் அனுப்புமாறு வேண்டுகின்றேன்.

யாழ் ஊனமுற்றோர் சங்கம்,
16, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

கு. சற்குணலிங்கம்
கௌரவ செயலாளர்

[சி3767]

## யாழ். ஊனமுற்றோர் சங்கம்
## புதிய பணிமனை அங்குரார்ப்பண வைபவம்

எமது புதிய பணிமனையின் அங்குரார்ப்பண வைபவம் 16, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் 18.01.1992 சனிக்கிழமை காலை 9,00 மணிக்கு நடைபெறும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன். எமது சங்கத்தின் பணிகளை ஊக்குவித்து ஊனமுற்றோர் வாழ்வு சிறப்பாக அமைய உங்கள் ஒத்துழைப்பைத் தரும்படி வேண்டுகின்றோம். இந்த நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் அன்புக்குரிய,

கு.சற்குணலிங்கம்,
கௌரவ செயலாளர்.

கலாநிதி
எஸ். சண்முகலிங்கம்
தலைவர்

(சி/3768)


## டிப்ளோமா மனையியலும், கைத்திறனும்

## Diploma in Home Science & Craft

KALALAYAAH கலாலயா

- சித்திரக்கலை [சித்திரங்கள் வரைதல், கோலங்கள் போடுதல்]
- வர்ணந்தீட்டுதல் [துணியிலும், கண்ணாடியிலும், இசைத் தட்டுகளிலும்]
- கைவேலை [மக்றமி நூல் வேலைப்பாடுகள், பஞ்சில் பொம்மைகள் செய்தல் வைக்கோல் வேலை, வாழைநார் வேலை, கம்பளி நூல் வேலைப்பாடுகள்]
- பூவேலை [கடதாசியினாலும், துணியினாலும் மலர்கள் செய்தல்]
- தையற்கலை [குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான சகலவிதமான ஆடைகளும் தயாரித்தல், பூவேலைப்பாடுகள் செய்தல்]
- சமையற்கலை [கீழைத்தேய. மேலைத்தேய உணவுகள் சிற்றுண்டிகள், குளிர்பானங்கள் ஐஸ்கிறீம், புடிங் வகைகள் மற்றும் உள்ளூர் மூலவளங்களைக் கொண்டு உணவுகள் தயாரித்தல்]
- கூந்தல் அலங்காரம் [கொண்டைகள் போடுதல், வீக் தயாரித்தல், மணப்பெண்ணுக்கான அலங்காரங்கள் செய்வித்தல்]
- கேக் ஐசிங்

### பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

* பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட *Diploma In Home Science & Craft* தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
* கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் காலை 9.00 முதல் பி.ப 1-00 மணி வரை நடைபெறும்.
* தொழில் புரிவோர், இல்லத்தரசிகள் [illegible]


## நினைவு கூருகின்றோம்

1992-01-11



மேஜர்
சோதியா

(சி3762)
தமிழீழ காவல்துறை

தலைவர் திரு. சி. குமாரவேல் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

மாணவர் சங்கத் தலைவர் எஸ். பத்மநாதன் அறிவித்துள்ளார்.


# டிப்ளோமா மனையியலும், கைத்திறனும்

# Diploma in Home Science & Craft

KALALAYAAH
கலாலயா

- சித்திரக்கலை [சித்திரங்கள் வரைதல், கோலங்கள் போடுதல்]
- வர்ணந்திட்டுதல் [துணியிலும், கண்ணாடியிலும், இசைத் தட்டுகளிலும்]
- கைவேலை [மக்ரமி நூல் வேலைப்பாடுகள், பஞ்சில் பொம்மைகள் செய்தல் வைக்கோல் வேலை, வாழைநார் வேலை, கம்பளி நூல் வேலைப்பாடுகள்]
- பூவேலை [கடதாசியினாலும், துணியினாலும் மலர்கள் செய்தல்]
- தையற்கலை [குழந்தைகள், சிறுவர்கள், மகளிருக்கான சகலவிதமான ஆடைகளும் தயாரித்தல், பூவேலைப்பாடுகள் செய்தல்]
- சமையற்கலை [கீழைத்தேய. மேலைத்தேய உணவுகள் சிற்றுண்டிகள், குளிர்பானங்கள் ஐஸ்கிறீம், புடிங் வகைகள் மற்றும் உள்ளூர் மூலவளங்களைக் கொண்டு உணவுகள் தயாரித்தல்]
- கூந்தல் அலங்காரம் [கொண்டைகள் போடுதல், வீக் தயாரித்தல், மணப்பெண்ணுக்கான அலங்காரங்கள் செய்வித்தல்]
- கேக் ஐசிங்

## பயிற்சிக் காலம் 6 மாதங்கள்

* பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட *Diploma In Home Science & Craft* தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
* கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன், வியாழன் ஆகிய தினங்களில் காலை 9.00 முதல் பி.ப 1-00 மணி வரை நடைபெறும்.
* தொழில் புரிவோர், இல்லத்தரசிகள் நலன் கருதி சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 முதல் பி.ப 3.30 வரையும் பயிற்சிகள் நடைபெறும்.

புதிய சனி - ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 19 01-92
புதிய கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம் 20 01 92

## இசை, நடன வகுப்புகள்

- சங்கீதம்
- வீணை
- மிருதங்கம்
- பரதநாட்டியம்
- வயலின்
- புல்லாங்குழல்

மேற்படி வகுப்புக்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் பி.ப. 3.00 மணிக்கு ஆரம்பமாகும். வீணை வகுப்பு சனி, ஞாயிறு பி.ப 2.30 க்கு ஆரம்பமாகும்.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 20-01-92 (தைப்பூசத்தினத்தன்று)

# கலாலயா

(அழகியற் கலைக் கல்லூரி)

விக்டோரியா வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ்ப்பாணம்.

(சி/3769)


யாழ். ஊனமுற்றோர் சங்கம்

## புதிய பணிமனை அங்குரார்ப்பண வைபவம்

எமது புதிய பணிமனையின் அங்குரார்ப்பண வைபவம் 16, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் 18.01.1992 சனிக்கிழமை காலை 9,00 மணிக்கு நடைபெறும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன். எமது சங்கத்தின் பணிகளை ஊக்குவித்து ஊனமுற்றோர் வாழ்வு சிறப்பாக அமைய உங்கள் ஒத்துழைப்பைத் தரும்படி வேண்டுகின்றோம். இந்த நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் அன்புக்குரிய,

கு.சற்குணலிங்கம், கௌரவ செயலாளர்.

கலாநிதி எஸ். சண்முகலிங்கம் தலைவர்

(சி/3768)

## நினைவு கூருகின்றோம்

## 1992-01-11



மேஜர் சோதியா

1986 ஆம் ஆண்டு இதே. தினத்தில் சிறிலங்காப் படையால் சுட்டுக்கொல்லப்பட்ட பாவற்குளத்தைச் சேர்ந்த பால் வியாபாரியான தமிழர்.

1987 ஆம் ஆண்டு பூநகரி 4 ஆம் கட்டையில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

**லிண்டன்** [மனுவல் சூசைப்பிள்ளை - கன்னாட்டி, அடம்பன், மன்னார்.]

1988 ஆம் ஆண்டு புங்குடுதீவில் இந்தியப்படை சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய

**தாத்தா** [வைரமுத்து நவரத்தினம் - 'கற்பகச் சோலை' புங்குடுதீவு கிழக்கு]

1990 ஆம் ஆண்டு ஊறணி, வல்வெட்டித்துறையில் மூளைக்காய்ச்சல் நோயினால் எமைப்பிரிந்த

**மேஜர் சோதியா** [மைக்கல் வசந்தி - கரவெட்டி மேற்கு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-3759)

### சிந்தனைக்கு

வாழ்க்கையின் இலட்சிய முடிவு,
இன்பமல்லல; ஒழுக்கமே
— ஹென்றி வார்ட்டீச்சர்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 11-01-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

## உல்லாசப் பயணமும் எயிட்ஸும்

உலக நிகழ்வுகளுக்கு ஏற்றால் போலவே சிறிலங்காவில் குறிப்பாக மேல் மாகாணத்தில் 'எயிட்ஸ்' அதிகரித்துவருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதற்கு விபச்சாரம், தன்னினச்சேர்க்கை, சிறுவர்கள் விபச்சாரம், போதைவஸ்துப் பாவனை போன்றவை காரணங்களென தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்காவின் தற்போதைய பொருளாதாரக்கொள்கை 1977 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டபோதே இவை தொடர்பான எச்சரிக்கை விடுக்கப்பட்டன ஆயினும் அதனை அதிகாரத்தில் இருந்த எவரும் கருத்திற்கொள்ளவில்லை. பொருளாதார முயற்சிகளுக்கே முக்கியத்துவம் கொடுத்தனர். 1977 ஆம் ஆண்டு சிறிலங்காவில் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையில் சுதந்திர வர்த்தக வலயமும், உல்லாசப்பயணத்துறையும் தவிர்க்க முடியாதவை. இவை இரண்டும் இல்லாமல் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கு புத்துயிர் அளிக்கமுடியாது. ஆகையில் அவற்றைவிருத்தி செய்யும்போது அவற்றுடன் இணைந்தவையான கலாசாரச் சீரழிவுகளும் தவிர்க்கப்பட முடியாதவையாகும். இவற்றின் வளர்ச்சியே இன்று ஆசியாவில் இரண்டாவது பெரிய சிறுவர் விபச்சார நாடாக சிறிலங்காவை மாற்றியுள்ளது.

இவற்றிற்கெதிரான பிரசாரங்கள் தற்பொழுது சிறிலங்காவில் தீவிரப்படுத்தப்பட்டிருப்பினும் இப் பொருளாதாரக் கொள்கை தொடரும்வரை இவை மூடியாதவையாகவே இருக்கும். உல்லாசப் பயணத்துறை வளர வேண்டுமானால் அவற்றுடன் இணைந்து சமூக, கலாசார சீரழிவுகள் இடம்பெறுகின்றமை தவிர்க்க முடியாததாகிறது.

தற்பொழுது தமிழர் பிரதேசங்கள் யுத்தச் சூழல் நிலவுவதினால் இதன் தாக்கத்திலிருந்து ஓரளவு தப்பியுள்ளது. ஆனால் அவற்றிலிருந்து நாம் பூரணமாக தப்பியுள்ளோமா என்றால் அதுதான் இல்லை.

வடக்கு - கிழக்கில் இருந்து பல்லாயிரக் கணக்கானோர் வெளியேறி கொழும்பிலும், வெளிநாடுகளிலும் வாழ்கின்றார்கள். அவர்களின் வாழ்க்கை முறையில் முன்னைய சமூகக் கட்டுபாடுகளும் தளர்த்தப்பட்டும், கலாசாரம் கைவிடப்பட்டதுமான நிலையில் வாழ்க்கையை நடத்துவதாகத் தெரியவருகிறது. இதன் மூலம் இவர்களில் முழுமையாக இல்லாவிடினும் ஒரு குறிப்பிட்ட தொகையினராவது இச் சமூக கலாசார சீரழிவுகளின் தாக்கத்திற்குட்பட்டவர்களாகவும் அவற்றின் எச்சங்களான எயிட்ஸ் போன்ற நோய்களுக்கு ஆட்பட்டும் இருப்பது தவிர்க்க முடியாததாகும்.

இந்நிலையில் யுத்தச் சூழ்நிலை நீங்கி சமாதான சூழ் நிலை ஒன்று உருவாகும் பட்சத்தில் இவர்களில் அநேகர் இங்கு திரும்ப முற்படலாம். அப்பொழுது அவர்களுடைய புதிய பழக்கங்கள் நோய்கள் என்பவற்றுடனேயே அவர்கள் உப்புகுவார்கள். இதைத் தவிர்க்க முடியாது. ஆகையினால், எம்மை நோக்கிஅப்பயங்கர ஆட்கொள்ளிநோய்களும் சமுதாயச் சீரழிவும் வந்தடையும். எனவே வடக்கு - கிழக்கு மக்களும் இவை குறித்து விழிப்பாகவே இருக்க வேண்டும். அதற்குரிய முன்னேற்பாடு நடவடிக்கைகளையும்எடுத்தே ஆகவேண்டும்.

# இனப்பிரச்சினைத் தாக்கம் மலையகத்திலும் உள்ளது

## -செல்லச்சாமி

(கொழும்பு)
இனப்பிரச்சினையின் தாக்கம் நாடு முழுவதிலும் வாழும் தமிழர்களைப் பாதிக்கிறது என்று இ. தொ. காவின் செயலாளரும், ராஜாங்க அமைச்சருமாகிய எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் அமைச்சர் தொண்டமானின் யோசனைகள்குறித்து பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதனையொட்டியே கொழும்பிலும் மலையகத்திலும் ஏனைய பகுதிகளிலும் அடிக்கடி சந்தேகத்தின் பேரில்பலர் கைதாகின்றனர் என்றும், மலையக மக்கள் மீது கூட சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றும் செல்லச்சாமி குறிப்பிட்டார்.

ஆகவே இ. தொ. கா. இனப்பிரச்சினைக்குத் துரிதமாகத் தீர்வு காணும் முயற்சியில் தீவிரமாக உள்ளது என்றும்-

அப்பாவி மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இ. தொ. காவிற்கும் உள்ளது என்றும் அமைச்சர் செல்லச்சாமி குறிப்பிட்டார்.

அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்துள்ள யோசனைகளை பரிசிலனைக்கு எடுத்துக் கொண்டால் ஒத்துவராத அம்சங்களை மட்டும் விவாதத்திற்கு எடுக்கலாம். மாற்று யோசனைகளைஅரசியல் கட்சிகள் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும்.

உருப்படியான யோசனைகள் இல்லாமல் சர்வகட்சி மாநாட்டைப் போல் காலத்தை வீணாக்காமல் செயல்பட வேண்டும்.

1983 ஆம் ஆண்டின் இனக் கலவரத்தைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்ட ஆறாவது அரசியல் திருத்தம் வடக்கு கிழக்கு மாகாண மக்களின் அரசியல் பிரதி நிதித்துவத்திற்கு கதவடைப்பு செய்துவிட்டது. இதுவே ஆயுதப் போராட்ட உணர்வுகளுக்கு உந்து சக்தியாக அமைந்துவிட்டது என்றும் செல்லச்சாமி குறிப்பிட்டார்.

### இந்திய 'ஹாசாவர்தன்'

## ஒவ்வொரு 10 நாட்களுக்கு மூன்று தரம் பிரயாணம்

(கொழும்பு)
ஒவ்வொரு பத்து நாளுக்கும் 3 தடவை வர இருக்கும் 'ஹார்சாவர்தன்' கப்பலில் தமிழ் நாட்டிலுள்ள தமிழ் அகதிகள் நாடு திரும்புவர். இத்தகவலை புனர்வாழ்வு புனருத்தாரண, சமூகநல அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி டி சில்வா தெரிவித்தார்.

முதலாவது தொகுதியில் 780 அகதிகள் 21 ஆம் திகதி தமிழ் நாட்டிலிருந்து புறப்படுவர். திருக்கோணமலையைச் சேர்ந்த 3800, பேரும் மன்னாரைச் சேர்ந்த 13,600 பேரும் வவுனியாவைச் சேர்ந்த 6,400 பேரும்நாடுதிரும்புவர்.

இவர்கள் வடக்கு-கிழக்கில் ஏற்படும் பிரச்சினை காரணமாக தமிழ்நாட்டுக்குச் சென்றவர்கள் எனவும் இப்பொழுது வடக்கு-கிழக்கில் சுமூகநிலை ஏற்பட்டுள்ளதால் நாடு திரும்ப சம்மதித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இவ்விடயம் சிறிலங்காவிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

### பாராளு. தெரிவுக்குழுவிற்கு

## இன. பிர. குறித்து மாநாடு ஆலோசனை சமர்ப்பிக்கும்

(கொழும்பு)
இனப் பிரச்சினைத் தீர்விற்கான வழிவகைகளை ஆராய நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு சர்வகட்சி மாநாடு இது தொடர்பாகத் தனக்குக் கிடைத்த யோசனைகளைத் தெரிவித்துள்ளதென ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

சர்வகட்சிமாநாட்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினால் கையளிக்கப்பட்ட யோசனைகள் மற்றும் விவகாரங்கள் யாவும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டன என்றும் அவர் குறிப்பிட்டார்.

### போராசிரியர்

மாட்டார்கள் எனக் கூறினார்கள். ஆனால் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைப் பற்றி உரையாற்றக் கூடாது என்று கூறினார்கள்' என்று பேராசிரி புல்ஜன்ஸ் நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

1988ஆம் ஆண்டு யூன்மாதம் 26 ஆம் திகதி கொழும்பில் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த உரையாற்றச்சென்றுகொண்டிருக்கையில் இவர் கடத்தப்பட்ட சம்பவத்தோடு சம்பந்தப்பட்டார் என்று காமினி திஸநாயக்கா மீது வழக்குக தொடரப்பட்டது தெரிந்ததே.

### காங்கேசன்

காரி தெரிவித்தார்.

காங்கேசன் துறையிலிருந்து கீரிமலை வீதிவாயிலாக உணவு வாகனங்கள் யாழ்ப்பாணம் வருவது சம்பந்தமாக விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்திற்கும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கும் மத்தியில் ஏற்கனவே உடன்பாடு காணப்பட்டிருந்தது. எனினும் கூட்டுப்படை தலைமை அதிகாரிகளின் இழுத்தடிப்பு காரணமாக துறைமுகத்தை திறந்து விடுவதில் தாமதம் ஏற்பட்டுவந்தது.

இதே சமயம், காங்கேசன் துறைமுகத்தை திறந்துவிடும் இறுதி ஒழுங்குகளைசெய்வதற்காக செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் அடுத்தவார ஆரம்பத்தில் பலாலிஇராணுவ அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தவிருக்கின்றனர்.

## சூழல் அசுத்தமே நோய் பரவக் காரணம்

சூழல் அசுத்தமடைவதினாலேயே இன்று பலவகையான நோய்களும் உருவாகிப் பரவுகின்றன

மலத்தில் காணப்படும் இக் கிருமிகள் உணவு, குடிநீர், கைவிரல்கள் ஊடாக வாய் மூலம் உட்செல்வதால் நெருப்புக் காய்ச்சல், வயிற்றோட்டம், வயிற்றுளைவு, செங்கமாரி, இளம்பிள்ளைவாதம், வாந்திபேதி போன்ற நோய்கள் உருவாகின்றன எனச் சூழல், சுகாதாரம் பேணுவோமென்ற தலைப்பில் யாழ். லயன்ஸ் கழகம் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அரசியல்

கொள்ளப்படும் என்று சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

### பூசா

வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்த மாநாட்டிற்கு சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தலைமை வகிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### பூநகரியில்

வந்த அறுபது லொறிகள் மற்றும் முப்பது ராக்டர்கள், லான்ட் மாஸ்ரர்கள், மினி வான்கள் ஆகியன சிக்கின.

இவ்வாகனங்களை மீட்டுத் தருமாறே நேற்று யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகரிடம் வட பிராந்திய பொதி சுமக்கும் வாகன சங்கத் தலைவர் சி. அழகானந்தம் தலைமையிலான குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

### பேச்சுவார்த்தை

இலங்கையின் நிலவரங்களை தூதுவர்களுக்கு விளக்கம் அளிப்பதற்கான இந்த மாநாடு பெப்ரவரி 7 ஆம்திகதி பாரீஸில் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் வருடாந்தக் கூட்டத்திற்கு முன்னோடியானது என்பது குறிப்பிடத்தக்கது.

86 கோடி டொலர்களை உதவி வழங்கும் நாடுகளிடம் இருந்து இந்தவருடம் இலங்கை அரசு உதவியாகவும், கடனாகவும் எதிர்பார்க்கிறது.

### வீரச்சாவு

கும் வெள்ளாச்சி வீதிக்கும் இடையிலுள்ள தம்பனையாற்றுக்குச் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரவேங்கைவேலன் சுயானந்தன் (கருவேப்பங்கேணி முப்பதாம் வீட்டுத்திட்டம் மட்டக்களப்பு) வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

### குருநகர்

என்ற சிறுவன் ஒரு காலை இழந்துள்ளார். பி. வானதி (வயது 17), விஞ்சலோஸ் (வயது 30), ஆகியோர் பலத்த காயமடைந்திருக்கின்றனர். ச. ரத்தினம்(வயது 56)கொல்லப்பட்டார். அத்துடன் மேலும் ஒருவர் சிறு காயமடைந்தார்.

சீனோர் கட்டிடத்திற்கு அருகாமையிலும் வேளாங்கண்ணி மாதா கோயிலுக்கு அருகாமையிலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்திருக்கின்றன. இதனால் சில வீடுகளும் சேதமடைந்தன.

# யுத்தத்தினால் நாட்டைக் கட்டிக்காக்க முடியாது

## கண்டி அதிமேற்றிராணியார்

(கண்டி)

இலங்கை எமது தாய்த்திரு நாடு. இந்நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் சகோதரர்களாவர். இத்தகைய சகோதர உணர்வு அனைவரிடத்திலும் ஏற்பட வேண்டும். எம் மத்தியில் சமாதானம், ஐக்கியம், புரிந்துணர்வுகள் நிலைகொள்ளவேண்டும். அப்போதுதான் எம்மால் இந்நாட்டைக் கட்டிச்காக்க முடியும் என கண்டி புனித அந்தோனியார் தேவாலய அதிமேற்றிராணியார் கலாநிதி லியானி பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவியேற்று மூன்றாண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி கண்டி புனித அந்தோனியார் தேவாலயத்தில் இடம்பெற்ற வைபவத்தில் ஜனாதிபதியை வரவேற்றுப் பேசுகையிலேயே இவ்வாறு அவர்தெரிவித்தார்.

வடக்கில் இடம்பெற்றுவரும் யுத்தம் எந்தவித பயனையும் மக்களுக்குப் பெற்றுக்கொடுக்காது. பதிலுக்கு மக்கள் அகதிகளாகவும் உயிர்ப் பலிகள் அதிகரிக்கவுமே வழிவகுக்கும் என அவர் தெரிவித்தார்.

## அடையாளம் கூறிப்பெறவும்

சின்னமடுபடி சரவணையைச் சேர்ந்த மரிகலியுகன் என்பவரது பிறப்பு அத்தாட்சி பத்திரம் எண் சோதிட புத்தகங்கள் ஆகியன பூ. ஜெயராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## மேலதிக நோயாளருக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ், போதனா மருத்துவமனையின் வெளி நோயாளர் பிரிவில் மேலதிக நோயாளருக்கு சிகிச்சை அளிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தற்போது இவ் வைத்திய சாலைக்கு அதிகளவு நோயாளர்கள் சிகிச்சைக்காக வருவதாலும் இப்பிரிவுக்கு போதியளவு மருத்துவர்கள் சேவையில் இல்லாததினாலும் சிகிச்சைக்காக வரும் அனைவருக்கும் சிகிச்சை அளிக்கமுடியாதநிலை இருந்து வருகிறது. இதனால் நூற்றுக் கணக்கில் இல்லாவிட்டாலும் நோயாளிகள் பலர் சிகிச்சை பெற முடியாமல் திரும்பிச் செல்லும் நிகழ்வுகள் நடைபெற்றிருப்பதாகவும் வைத்திய சாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். வெளிநோயாளர் பிரிவு பொறுப்பு அதிகாரியால் நடை முறைக்கு கொண்டுவரப்பட்ட நம்பர் கொடுக்கும் திட்டம் வெற்றி அளித்திருப்பதால் இத்திட்டம் மேலும் விஸ்தரிக்கப்பட இருப்பதாகவும் அனைத்து நோயாளருக்கும் சிகிச்சை வழங்குவதற்கும், நெருக்கடியை தவிர்ப்பதற்காகவும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

இதற்காக மாநகர சபை சுகாதார வைத்தியப் பிரிவுடன் இணைந்து நல்லூரில் ஒரு புதிய சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஆரம்பிக்கப்படஇருப்பதாகவும், வெளி நோயாளர் பிரிவு வாயிலில் காவலாளி ஒருவரை நியமிக்க இருப்பதாகவும் கூறப்பட்டது.


யாழ்ப்பாண மாநகரசபை

### வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1992

பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு யாழ்ப்பாண மாநகரசபையுடன் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்கள், ஒப்பந்தகாரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு பதிவுக் கட்டணத்திற்கான காசோலையை அல்லது காசுக்கட்டளையை 'ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்ற பெயருக்கு எழுதி அதனை விண்ணப்பத்துடன் சேர்த்து 10-02-1992 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எனக்கு அனுப்புதல் வேண்டும். அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1992'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| | பொருட்களின் விபரம் | மீளளிக்கப் படாத பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01. | எழுது கருவிகள் | — 100.00 |
| 02. | அச்சிட்ட படிவங்கள், பத்திரங்கள் | — 100.00 |
| 03. | சௌக்கிய சேவைப் பொருட்கள் | — 100.00 |
| 04. | பிரசவ விடுதிக்கு மேலை நாட்டு மருந்துகள் | — 100.00 |
| 05. | மரப்பலகைகள் | — 100.00 |
| 06. | தண்ணீர் மானிகள் | — 100.00 |
| 07. | பி.வி.சி. குழாய் பொருத்திகள் | — 100.00 |
| 08. | ஜி. ஐ. குழாய்கள் பொருத்திகள் | — 100.00 |
| 09. | இரும்புக் கம்பிகள் | — 100.00 |
| 10. | இரும்புச் சாமான்கள் | — 100.00 |
| 11. | பெயின்ற் வகைகள் | — 100.00 |
| 12. | மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் | — 100.00 |
| 13. | மின்சாரப் பொருட்கள் | — 500.00 |
| 14. | ஆயுர்வேத மருந்துவகைகள் | — 100.00 |

குறிப்பிட்ட கால எல்லைக்குள் பொருட்களை வழங்கத்தவறும் அல்லது மாதிரிக்கு அமைய வழங்கத்தவறும் வழங்குநர்களின் பதிவுகள் எவ்வித அறிவித்தலுமின்றி பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம் 09-01-1992.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

(சி/3764)


இப்பத்திரி யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### நள்ளிரவில்

யாக உட்புகுந்த விடுதலைப் புலிகள் குடாநாடு நோக்கிய தாக முன்னால் இருந்த காவலரண்மீது பின்புறமாகத் தாக்கினர். புலிகளின் இத் திடீர்த் தாக்குதலினால் எட்டுக் கடற்படையினர் காவலரணிலேயே கொல்லப்பட்டனர் இருவர் காவலரணிலிருந்துதப்பி ஓடும் போது சுட்டுக் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் பல அதிரடித் தாக்குதல்களை விடுதலைப் போராட்ட வரலாற்றில் மேற்கொண்டிருப்பினும் மிகவும் பாதுகாப்பாக அமைந்திருந்த இக் காவலரண் மீது மேற்கொண்ட தாக்குதல் அவர்களின் துணிவிற்கும், திட்டமிடலுக்கும்எடுத்துக் காட்டான ஒரு தாக்குதலாகும்.

### தொண்டாவின்

சமாதானத் திட்டம்பற்றி அரசாங்கத் தூதுக் குழுவினர் எதுவும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### நவீன

- ★ 60 எம். எம். மோட்டர் ஸ்கோப் 01
- ★ வோக்கி 01
- ★ றம் மகசீன் 09
- ★ ஆர். பி. ஜி. ஷெல்கள் 06
- ★ ஏ. கே. மகசீன் 18
- ★ ரி.81-1 மகசீன் 05
- ★ ஏ. கே. எல். எம். ஜி லிங்குடன் ரவைகள் 868
- ★ ஐ. எம். ரவைகள் 1950
- ★ ஜே. ஆர். கைக்குண்டுகள் 14
- ★ சிக்னல் காட்றச் 04
- ★ ஆர். பி. ஜி. புறப்ளர் 03
- ★ 60 எம். எம் ஷெல்கள் 20
- ★ ஆர். பி. ஜி. கோல்சர்கள் 02
- ★ ஏ. கே கோல்சர்கள் 05
- ★ சப்பாத்து 1 சோடி

## பருத். இறங்குதுறை இழுவைப்படகு சேதம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்கு துறையில் பொருள்களை இறக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இழுவைப்படகுகளில் ஒன்று நேற்றுமுன்தினம் சேதமடைந்தது.

கடுங்காற்றினாலும் அலையினாலும் பாறைகளுடன் மோதியே மேற்படி படகு சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் குமணா கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும்பணி தாமதமடைந்துள்ளது. இதுவரை இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த ஐந்து இழுவைப் படகுகளில் ஒன்று ஏற்கனவே பொம்பர் தாக்குதலால் சேதமடைந்தது தெரிந்ததே. தற்போது குமணாகப்பலில் உள்ள பொறியியலாளரைக் கொண்டு சேதமடைந்த இழுவைப் படகைத் திருத்தும் பணியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுள்ளது. (ச)

## ஒரே நாளில் எட்டுப் பேரை விசர் நாய் கடித்தது

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் ஒரேநாளில் எட்டுப்பேர் விசர்நாய்க் கடிக்கு இலக்காயினர். கட்டாக்காலி நாய் ஒன்றுக்கு விசர்பிடித்ததை தொடர்ந்து அது நேற்றுமுன்தினம் மாதகலில் எட்டுப் பெண்களைக் கடித்துக் குதறியதுடன் இரண்டு ஆடுகளையும் கடித்தது. இதனால் அப்பகுதி மக்கள் சாதாரண நாய்களைக் கண்டாலே கிலிகொண்டு ஓடுகின்றனர். விசர்நாய்க்கடி மருந்திற்கு பெரும் தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையில் இந் நாயைக் கொல்ல இது வரை எவரும் முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் உதவியை ஈ. பி. ஆர். எல். எப். கோருகிறது

(டில்லி)

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க இந்திய அரசினதும் ஏனைய அரசியல் கட்சிகளினதும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்புகள் கிடைக்க வேண்டுமென ஈ. பி. ஆர். எல். எப். செயலாளர் சுரேஷ் பிறேமச்சந்திரனும் கேதீஸ்வரனும் இந்திய அமைச்சர்களிடமும், கட்சித்தலைவர்களிடமும் கேட்டுக் கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி, வெளியுறவுத் துறைச் செயலர்ஜெ.என்.திக்ஷித் இந்திய தூதரக முன்னாள் அதிகாரி கர்திபூரி ஆகியோரை சந்தித்து இலங்கைப் பிரச்சினையின் இன்றைய நிலைமை குறித்தும், இந்தியாவில் தங்கியிருக்கும் அகதிகள் விவகாரம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சுப்புலெட்சுமி கைதால் தி.மு.க. அம்பலப்படுகிறது - வாழப்பாடி

(சென்னை)

தி. மு. க'வின் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீசனும் அவரது கணவர் ஜெகதீசனும் 'டடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பது விடுதலைப்புலிகளுக்கும் தி. மு. க. விற்கும் இடையில் உள்ள நெருங்கிய தொடர்பை மேலும் உறுதிப்படுத்துகின்றது என்று தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் இவர் விடுத்துள்ள செய்தியொன்றிலேயே இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருக்கும் ஏனைய தி. மு.க. உறுப்பினர்களையும் கைது செய்யவேண்டும் என்றும்,

தமிழகக் கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் டீசல், மருந்துப் பொருள்களை கடத்துவதில் இன்னமும் ஈடுபட்டுள்ளார்களென்றும் கடலோரப் பகுதிகளில் கண் காணிப்பை பலப்படுத்த வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கேட்டுள்ளார்.

### துரோகிகளுக்கு

விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்ததன் மூலம் தமிழினத்திற்குத் துரோகம் இழைத்த மேயர் அல்பிரட் துரையப்பாவுக்கும், அதைத்தொடர்ந்து திரு. வஸ்தியாம்பிள்ளைக்கும் விடுதலைப் புலிகள் மரண தண்டனை நிறைவேற்றினர். இதைத்தொடர்ந்து போராளிகளைத் தேடி கைது செய்வதிலும், கைது செய்யப்பட்டவர்களைச் சித்திரவதை செய்வதிலும் ஈடுபட்டமை மற்றும் இவற்றிற்கு உடந்தையாக இருந்தமை போன்ற தேசத் துரோகச் செயல்களுக்காக இம்மூவரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

உரும்பராயைச் சேர்ந்த பேரின்பநாயகம், முன்னாள் சி.ஐ.டி இன்ஸ்பெக்ரர் தாமோதரம் பிள்ளை, மயிலிட்டியைச் சேர்ந்த செல்லையா ஆகிய மூவருமே கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

பேரின்பநாயகம், அல்பிரட் துரையப்பாவின் நெருங்கிய நண்பர் என்பதும், செல்லையா என்பவர் போராளிகள்பற்றித் தகவல்கொடுப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் தொடர்பான விசாரணையின் விபரங்கள் பின்னர் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)